விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 111 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 26 திங்கட்கிழமை (08.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நாமலுக்கு இன்னும் காலம் தேவை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உண்டு என முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஜய ஸ்ரீ மகா போதியை தரிசனம் செய்த பின் னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி 15



### 50 வீதத்தால்
## எரிபொருள் பாவனை குறைந்தது

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் பாவனை 50 வீதத்தால் குறைந் துள்ளதாக பெற்றோலிய விநி யோகஸ்தர்கள் சங் கம் தெரிவித்துள்ளது. 15

## வடக்கில் இன்று உஷ்ணம் உயர்வடையும்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இன்று உஷ்ணம் உயர் வடைந்து காணப்படும். எனவே பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளனர்.

இன்று மனித உடலால் உணரப்படும் அளவிற்கு வெப்பநிலை அதிகரித்து காணப் 15

### சுயநல அரசியலுக்காக
# தமிழரசுக் கட்சியை சிதைக்க முயற்சி



### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் உரிமைக்கான பாதையை நோக் கிச் செல்லும் தமிழரசுக் கட்சியை சிலர் தங்களின் சுயலாப அரசியலுக்காக சிதைக்க முற்படுவது கவலையளிக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித் துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் வாழவைத்த குளம் பகுதியில் இடம்பெற்ற பட்டா - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த அல்முதீன் மிஹ்ராஜ் (வயது-21) என்ற இளை ஞனே உயிரிழந்துள்ளார்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் செட்டிகுளம், வாழவைத்தகுளம் பகுதி 15

## ஏப்ரல் 15 விடுமுறை தினமல்ல

(கொழும்பு)

ஏப்ரல் 15ஆம் திகதி பொது விடுமுறை தினமாக பிரகட னப்படுத்துவதற்கு எவ்வித தீர்மானமும் 15

## ஓமந்தையில் புகையிரதத்துடன் பிக்கப் வாகனம் மோதி விபத்து

### ஒருவர் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் புகையிரதத்துடன் பிக்கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளா னதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் நானாட்டான் பகுதியைச் 15

## ஆட்டோவில் பயணித்த இருவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

இரத்தினபுரி மொரகஹ ஹேன தல்கஹவில மாலோஸ் கால்வாய் சந்திக்கு அருகில், நேற்று முச்சக்கரவண்டி ஒன் றின் மீது காரில் வந்த குழு வினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 15

## 10 கிலோ நிறையுடைய சி-4 ரக வெடி மருந்துடன்

### பூநகரியில் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

பூநகரி பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் ஆபத்தான வெடிமருந்தை, மோட்டர் சைக்கிளில் கடத்திச் செல்வதாக பூநகரி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் 15

### நாட்டில் அதிக வெப்பநிலை
## இல்ல விளையாட்டுப் போட்டிகளை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளின் இல்ல விளையாட்டுப் போட்டி களை தற்போது தற்காலிகமாக ஒத்திவைக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டின் பின்னர் விளையாட்டுப் போட்டிகளை நடத்து மாறு உரிய அதிகாரி களுக்கு அறிவிக்கப் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியாவில் மாணவனை தாக்கிய ஆசிரியை கைது

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் குறித்த பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் கடந்த (03.04.2024) அன்று பாடசாலை முடிந்து வீட்டிற்கு சென்ற நிலையில் மாணவனின் முகத்திலும், தலையிலும் அடிகாயங்கள் காணப்பட்டதை அடுத்து பெற்றோர் மாணவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கியதாக தெரிவித்துள்ளான்.

இதனை தொடர்ந்து சிறுவனின் தந்தை குறித்த ஆசிரியருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சிறுவனை தாக்கிய தற்கான காரணம் என்ன மற்றும் காலிற்கு கீழ் அடித்து இருக்கலாமே என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளித்த ஆசிரியை "உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை என்றும் அதனாலேயே அடித்தது என்றும் அடிக்கும் போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டுவிட்டது என்று கூறியதுடன், மகனுக்கு அடிக்காமல் கொஞ்சுவதா என ஆசிரியர் கேட்டுள்ளார்.

பெற்றோர் காயமடைந்த மாணவனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை வழங்கியதுடன், பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்தனர்.

இந்நிலையில் தாக்குதல் இடம்பெற்று நான்கு நாட்களின் பின் வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸார் நேற்று குறித்த ஆசிரியரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, இச் சம்பவம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவினர், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினர், வட மாகாண கல்வி திணைக்களத்தினர், வவுனியா வடக்கு கல்வி வலயத்தினர் ஆகியோரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10,250)


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (395)

074 17 37 684

## லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (396)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


# பெரியபுலம் மகா வித்தியாலயத்தின்

## மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டது

அதீத வெப்பம் காரணமாக யாழ் பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இன்று குறித்த நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையில் பிற்போடப்பட்டுள்ளதாக குறித்த பாடசாலையின் அதிபர் ந.பரமேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். நிகழ்வு நடத்தப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.(ம-10)

## தமிழ...

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது கட்சியின் நிலையில் மனம் பாதித்த நிலையில் நாம் இருக்கின்றோம். சுய நலத்துடன் சேர்ந்த சூழ்ச்சிகரமான சில செயற்பாடுகள் நடைபெறுகின்றது. என்னை நேரடியாக தாக்காவிட்டாலும் வேறு சிலரைக் கொண்டு தாக்க முற்படுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் முக்கிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி தன் நிலையை இழந்து எந்த நீதிமன்றத்திற்கு எதிராக வாதாடினோமோ அந்த நீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என் [illegible] (ம-10)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- மருதனார்மடம் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(394)

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389

077 986 5457

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. நாகேந்திரம் றஜேந்திரன்

(முகாமையாளர் வசந்த சினிமா)




04.04.2024 அன்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி திரு. மா. இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை (றூழடந ஊளடயனெ) சமாதான நீதவானாக பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். இவர் நவாலி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவரும் ஆவார். இவரின் சமூகப்பணிகள் மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்/ 31 பீ பொதுக்கிணறு வீதி, தோணிக்கல் வவுனியா. (C-0086)

வாழ்த்துவோர் : தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0084)

076 825 7716 (ஆகாஸ்)

## அவுஸ்திரேலியாவில் farm வேலைவாய்ப்பு

- முற்பணம் எதுவும் இல்லை
- கவர்ச்சிகரமான சம்பளம்
- குறுகிய காலத்தில் விசா பெற்றுத் தரப்படும்
- 20 நபர்களுக்கு மட்டுமே விசா உள்ளது

(333)

மேலதிக தகவல்களுக்கு இன்றே அழையுங்கள்

Hybrid international hub(pvt) ltd யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு -

076 250 0098, 021 222 1265

# மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் 03.10.2019 தொடக்கம் 07.04.2024 வரை அர்ப்பணிப்புடன் சேவையாற்றி தனது அறுபதாவது அகவையில் சேவையில் இருந்து ஓய்வு பெறும்

திருமதி சுதர்ஜினி இராசவடிவேலு (SLTS-I)

ஆசிரியர் அவர்களை ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

### சேவை விபரம்

- யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை 09.10.1990 - 31.12.2000
- யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி 01.01.2001 - 28.02.2001
- யா/ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை 01.03.2001 - 21.03.2010
- யா/வட்டு மத்திய கல்லூரி 22.03.2010 - 02.10.2019
- யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை 03.10.2019 - 07.04.2024

*வாழ்த்துவோர் :*
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை

(C-0083, 392)

# அன்பார்ந்த வர்த்தகப் பெருமக்களே!

தமிழ்ப் புத்தாண்டில் உங்கள் வலம்புரியில் வெளிவர இருக்கும் சிறப்பு மலரில் உங்கள் வர்த்தக விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமா?

நீங்கள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே

076 6363 378

என்ற Whatsapp மூலம் தொடர்பு கொள்ளவும்.

தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு மலருக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

விளம்பரப் பிரிவு

வலம்புரி நாளிதழ்

076 0973 127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாவெளி மக்களின்
# கோரிக்கைகள் நிராகரிக்க முடியாதவை
## சமத்துவக் கட்சி தெரிவிப்பு




(அக்கராயன்)

**தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்கள் பாதிக்கப்பட்டு தங்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டு மக்களுக்கும் பிரதேசத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும் முதலீட்டு முயற்சிகளை தங்களது பிரதேசத்திற்குள் அனுமதிக்காதீர்கள் என்ற பொன்னாவெளி மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஒரு போதும் நிராகரிக்க முடியாது என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

பொன்னாவெளியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இம் மக்கள் இன்றைக்கு 270 நாட்களை கடந்து அமைதி வழியில் தங்களது நிலத்தை பாதுகாக்க போராடி வருகின்றார்கள் எனவே அவர்களின் நியாயமான போராட்டத்தை மதித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர வன்முறைகளை தூண்டிவிடும் வகையில் வெளிப் பிரதேசங்களிலிருந்து மக்களை அழைத்துச் சென்று இனத்துக்குள்ளே மோதவிட்டு அதில் தங்களின் சுயலாபங்களை நிறைவேற்றிக்கொள்ளும் மிக மோசமான நடவடிக்கைகளை மக்களோடு நின்று சமத்துவக் கட்சியும் வன்மையாக கண்டிப்பதாக குறித்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-350)

# செல்வாநகர், உருத்திரபுரம் பகுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் திறப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி செல்வாநகர் உருத்திரபுரம் கிழக்கு ஆகிய பகுதிகளில் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நீர் வழங்கல் அமைச்சின் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட நனோ குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சின் குறித்த திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் 23 நனோான் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டதில் கடந்த ஜனவரி மாதம் 5 நனோ குடிநீர் சத்திகரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்ட நிலையில் மேலும் இரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரனதுங்க இராஜங்க அமைச்சர் தேனுக விதான கமகே மற்றும் நீர் வழங்கல் ராஜாங்க அமைச்சர் விஜேந்திர ராஜபக்ஷ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (நி-6-315,316)

# காற்றாலை மின்சார திட்டம் நெடுந்தீவில் பூமி பூசை



(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சூரிய ஒளி மின்சாரம் மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கான வேலைத் திட்டத்தின் மற்றுமொரு முன்னேற்பாடாக நேற்று நெடுந்தீவிலும் பூமி பூசை நிகழ்வு இடம்பெற்றது.

சூரிய ஒளிமின்சாரம் மற்றும் காற்றாலை மின்சாரம் உற்பத்திக்கான காற்றாலை அமையவுள்ள நெடுந்தீவில் இந்திய நிறுவன மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் "பூமி பூசை" நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் இந்த பாரிய மின்சாரத் திட்டமானது கடந்தவாரம் அனலைதீவில் முன்னெடுக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)



யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு அரசகேசரிப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம் : சிவசாந்தன்)

# இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பத்திரகாளி அம்பாளின் வருடாந்த பொங்கல் விழாவினை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்கிழமை "தொல்பரியாம் சுழிபுரத்தூரின் பத்திரகாளி" எனும் இசைப் பாடல் இறுவெட்டு ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்டது. (நி-6)

# செல்லப்பா சுவாமிகளின் 109 ஆவது ஆண்டு குரு பூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 109 ஆவது ஆண்டு குருபூசைத் தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை சுவாமிகளின் திருவுருவத்திற்கு அபிஷேகம் நடைபெற்று திருமுறை மற்றும் நற்சிந்தனை என்பன அடியார்களினால் ஓதப்படும்.

இதேவேளை யோகர் சுவாமிகள் சமாதியடைந்த 60 ஆவது ஆண்டு நினைவாக, "உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள்" எனும் தலைப்பில், யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட சிவன் அடியான் அமரர் கந்தப்பிள்ளை ஆசிரியர் எழுதிய நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டெழுந்தது மும்பை முத்திரை பதித்தார் ஷெப்பர்ட்

மும்பை அணி முதல் வெற்றியை பதிவு செய்தது. நேற்றைய லீக் போட்டியில் டில்லியை 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. 10 பந்தில் 39 ஓட்டங்கள் விளாசிய ஷெப்பர்ட், மும்பை அணிக்கு கைகொடுத்தார்.

இந்தியாவில் 17வது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. மும்பையில் நடந்த லீக் போட்டியில் மும்பை, டில்லி அணிகள் மோதின.

"ரி20" அரங்கின் "நம்பர்-1" வீரரான சூர்யகுமார், மும்பை அணியில் இடம் பெற்றார். "ஸ்போர்ட்ஸ் ஹெர்னியா" பாதிப்பில் இருந்து மீண்ட இவர், நான்கு மாதத்திற்கு பின் கிரிக்கெட்டில் களமிறங்கினார்.

**ரோகித் விளாசல்**

மும்பை அணிக்கு ரோகித் சர்மா, இஷான் கிஷான் கலக்கல் ஆமபம் கொடுத்தனர். முதல் விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், அக்சர் படேல் வலையில் ரோகித் (49 ஓட்., 6 பவுண்டரி, 3 சிக்சர்) சிக்கினார். நார்ட்ஜே பந்தில் சூர்யகுமார்(0) ஆட்டமிழந்தார். இஷான் கிஷான் 42 ஓட்டங்கள் எடுத்தார். பின் அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, ரிம் டேவிட் அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தனர். பாண்ட்யா, 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

**ஒரே ஓவரில் 32 ரன்**

கடைசி இரு ஓவரில் 51 ஓட்டங்க்ள எடுக்கப்பட, ஆட்டம் மும்பை பக்கம் திரும்பியது. இஷாந்த் ஓவரில்(19வது) ரொமாரியோ ஷெப்பர்ட் (மே.தீவுகள்) ஒரு பவுண்டரி, டேவிட் ஒரு சிக்ஷர், பவுண்டரி அடிக்க 19 ஓட்டங்கள் கிடைத்தன. நார்ட்ஜே ஓவரில்(20வது) வாணவேடிக்கை காட்டிய ஷெப்பர்ட் 32 ஓட்டங்கள் (4, 6, 6, 6, 4, 6) விளாசினார். கடைசி 5 ஓவர்களில் 96 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

20 ஓவர்களில் மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 234 ஓட்டங்களைக் குவித்தது. டேவிட் (45), ஷெப்பர்ட்(10 பந்தில் 39 ஓட்டங்கள், 3 பவுண்டரி, 4 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**"புன்னகை பூக்கள்"**

வான்கடே மைதானத்தில் திரண்ட 18,000 சிறுவர், சிறுமியர் மும்பை அணிக்கு ஆதரவு அளித்தனர். மும்பை வீரர் ரோகித் சர்மா கூறுகையில்,"பல்வேறு தன்னார்வ அமைப்புகளில் இருந்து வந்துள்ளனர். கடின வாழ்க்கையை வாழ்கின்றனர். இவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படும். மைதானத்திற்கு வந்து போட்டியை நேரில் பார்க்கும் இவர்களது முகத்தில் புன்னகை பூக்கும்," என்றார்.

**ஸ்டப்ஸ் ஆறுதல்**

கடின இலக்கை விரட்டிய டில்லி அணிக்கு வோர்னர்(10) ஏமாற்றினார். பின் பிரித்வி ஷா விளாச, 11 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 107 ஓட்டங்களை எடுத்தது. பும்ரா "வேகத்தில்" பிரித்வி(66ஓட்., 8 பவுண்டரி, 3 சிக்சர்) ஆட்டமிழந்தார்.

அபிஷேக் போரல் 41 ஓட்டங்கள் எடுத்தார். கோயட்சீ பந்தில் அணித் தலைவர் ரிஷாப் பன்ட்(1) ஆட்டமிழக்க, சிக்கல் ஏற்பட்டது. தனிநபராக போராடிய ஸ்டப்ஸ் அரைச்சதம் கடந்தார்.

20 ஓவர்களில் டில்லி 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்கள் எடுத்து, தோல்வியடைந்தது. ஸ்டப்ஸ் (25 பந்துகளில் 71 ஓட்., 3 பவுண்டரி, 7 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தார். (ம-7)




## குஜராத்தை வீழ்த்தியது லக்னோ

# யாஷ் தாகூர் அசத்தல்

லக்னோவுக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் துடுப்பாட்டதில் சரிந்த குஜராத் அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. "வேகத்தில்" அசத்திய யாஷ் தாகூர் 5 விக்கெட் கைப்பற்றினார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. லக்னோவில் நடந்த லீக் போட்டியில் லக்னோ - குஜராத் அணிகள் மோதின.



லக்னோ அணிக்கு உமேஷ் யாதவ் தொல்லை கொடுத்தார். இவரது "வேகத்தில்" குயின்ரன் டி கொக் (6), தேவ் தத் படிக்கல் (7) வெளியேறினர். பின் இணைந்த அணித் தலைவர் ராகுல், ஸ்டாய்னிஸ் ஜோடி நிதானமாக விளையாடியது. ஸ்பென்சர் ஜோன் சன் வீசிய 4ஆவது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி அடித்தார் ராகுல். ஜோன் சன், உமேஷ் பந்தில் தலா ஒரு பவுண்டரி விரட்டினார் ஸ்டாய்னிஸ். மூன்றாவது விக்கெட்டுக் காக 73 ஓட்டங்கள் சேர்த்த போது தர்ஷன் "வேகத்தில்" ராகுல் (33) வெளியேறினார். தர்ஷன் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஸ்டாய்னிஸ் (58) அரைசதம் கடந்தார். மோகித் வீசிய 18வது ஓவரில் பூரன் ஒரு சிக்சர், ஆயுஷ் படோனி 2 பவுண்டரி விளாச 17 ரன் கிடைத்தன. ரஷித் கான் "சுழலில்" படோனி (20) சிக்கினார்.

20 ஓவர்களில் லக்னோ அணி 5 விக்கெட்டுக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. பூரன் (32), குர்னால் பாண்ட்யா (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**விக்கெட் சரிவு**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில் (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். வில்லியம்சன் (1) ஏமாற்றினார். சாய்சுதர்சன் (31) ஆறுதல் கொடுத்தார். குர்னால் பாண்ட்யா "சுழலில்" ஷரத் (2), தர்ஷன் (12) சிக்கினர். யாஷ் தாகூர் "வேகத்தில்" விஜய் சங்கர் (17), ரஷித் கான் (0) வெளியேறினர். நவீன் பந்தில் உமேஷ் (2) ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய யாஷ் தாகூர் பந்தில் டிவாட்டியா (30), நூர் அகமது (4) ஆட்டமிழந்தனர்.

18.5 ஓவர்களில் குஜராத் 130 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. லக்னோ சார்பில் யாஷ் தாகூர் 5, குர்னால் பாண்ட்யா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (ம-8)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 06 - 1960



மறைவு 07 - 04 - 2024

### தெய்வேந்திரம் இரவிச்சந்திரன்

பிளாக் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் பிரப்பங்குளம் லேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் இரவிச்சந்திரன் அவர்கள் 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் - இராசமணி தம்பதியினரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகராசா - இராசாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஐஸ்வர்யாவின் அன்புத் தந்தையும் தவமணிதேவி மற்றும் மதிவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மீனாம்பிகை காலஞ்சென்ற குணசேகரன் மற்றும் விக்கினேஸ்வரன், ஜெயராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2024) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.3/3,
பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(397)

தகவல்:
குடும்பத்தினர்
077 372 1324

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த தேர்தலை முதலில் நடத்துவது என ரணிலே தீர்மானிக்கலாம்-பசில்



(கொழும்பு)

'எந்த தேர்தலை முதலில் நடத்துவது என ஜனாதிபதியே தீர்மானிக்கலாம் எனவும் அதற்கு பொதுஜனபெரமுன இடமளிக்கும் எனவும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை நாம் அவருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். அத்துடன் அது முடிவடைந்து விட்டது. இனி அவரே தீர்மானிக்கலாம் என பசில் ராஜபக்ச தனியார் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து, பசில் ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

எங்கள் கட்சி எந்த வகையிலும் ஜனாதிபதிக்கு அழுத்தங்களைக் கொடுக்காது.

பொதுத்தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்ற தனது தனிப்பட்ட கோரிக்கைக்கு அப்பால், எந்த தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்பது குறித்து வேறு எந்த பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முடிவு என்பது முற்றிலும் ஜனாதிபதியின் கரங்களிலேயே உள்ளது.

இரண்டு தேசிய தேர்தல்களையும் எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தயாராகி வருவதாகவும் நாளை 9 ஆம் திகதி கட்சியின் மத்திய நிறைவேற்றுக்குழுவின் கூட்டம் இடம் பெறவுள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்
# ஆதாரங்களை பாராளுமன்றில் சமர்ப்பிக்க மைத்திரிக்கு உத்தரவு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 24ஆம் திகதியிலிருந்து பாராளுமன்றத்தில் இடம்பெறவிருக்கும் உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் குறித்த மூன்று நாள் விவாதத்திலேயே இவ்வாறு ஆதாரங்களை முன்வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019 இல் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட போது அரச தலைவராக இருந்த மைத்திரியின் தகவல்களை அனைவரும் அறிய வேண்டும் என்பதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவாதத்தை கோரியிருந்தது.

இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும் என அண்மையில் அவர் கூறியிருந்தது சர்ச்சையை கிளப்பியது.

இதனை தொடர்ந்து, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மைத்திரிபாலவிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தப்பட்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் அளிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இருப்பினும் அவர் அதை ஏற்க மறுத்துள்ளதுடன் குற்றப்புலனாய்வு துறையிடம் அளித்த வாக்குமூலத்தில் அண்டை நாட்டின் பெயரையும் குறிப்பிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிரித்தானிய அரச குடும்பம்
# இலங்கை விஜயம்

(கொழும்பு)

பிரித்தானிய அரச குடும்ப உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் உள்ள உலகின் இரண்டாவது பழமையான கோல்ஃப் மைதானத்தில் பல தனித்துவமான போட்டிகளை நடத்துவதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, குறித்த நிகழ்வுகளில் பிரித்தானிய அரச குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட அந்த கோல்ஃப் மைதானமானது கிட்டத்தட்ட 100 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

அத்தோடு இந்த மைதானம் கொழும்பு நகருக்கே அழகு சேர்க்கும் வகையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மாடு திருடுபவர்களுக்கான அபராதம்
# 10 லட்சமாக அதிகரிப்பு
### கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

கால்நடைகளை திருடும் நபருக்கு தற்போது விதிக்கப்படும் 10,000 ரூபா அபராதத்தை திருத்தம் செய்து பத்து இலட்சம் ரூபாவாக அதிகரிக்க புதிய சட்ட மூலம் கொண்டுவரப்படவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாடு திருடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கால்நடை உரிமையாளர்களுக்கு பெரும் இடையூறாக இருக்கும் மாடு திருடர்களுக்கு மிக உயர்ந்த தண்டனை வழங்கப்படும்.

தற்போது நடைபெற்றுவரும் நீதி நடவடிக்கைக்கு இணையாக மாடு திருடர்களை கைது செய்யும் நடவடிக்கையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமரவீர தெரிவித்துள்ளார். (நி-6)

# வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் விதைகள்-விவசாயத் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து முதன்முதலாக பலவகையான விதைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கையின் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மிளகாய், கத்தரிக்காய், வெண்டைக்காய் மற்றும் சோளம் ஆகிய விதைகள் இதற்காக வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆய்வுகளானது விவசாயத்துறை வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படவுள்ள இந்த விதைகளுக்கு, சர்வதேச நாடுகளில் அதிகளவான கேள்வி காணப்படுகின்றது.

அதேவேளை, இந்த விதைகளை பதப்படுத்தும் நடவடிக்கையானது விவசாயத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# இராசிபலன்

08.04.2024
பங்குனி 26, திங்கட்கிழமை,
அமாவாசை பின்னிரவு 12.36 மணிவரை

உத்தரட்டாதி முற்பகல் 10.11 மணிவரை
சுபநேரம் -12.07-1.37 மணிவரை
இராகுகாலம் -7.37-9.07 மணிவரை

அமாவாசை விரதம்,
சந்திராஷ்டமம்.
ஆயிலியம்.

வளவன்

**மேஷம்** – விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், உடல்நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**துலாம்** – நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** – ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** – தொழில் ரீதியான சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசிவழியில் அனு கூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** – குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மிதுனம்** – மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், மனநிறைவு கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** – கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**தனுசு** – கூட்டு முயற்சிகளில் முனனேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** – மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.


அச்சம் என்பது மனிதர்களை ஒடுக்கி ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெத்தலியாற்று விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு

## நிலங்களை பாதுகாத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை

**(தருமபுரம்)** கல்மடுக் குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறை வைத்து காலபோகம், சிறுபோகம் செய்து வரும் விவசாயிகளின் விவசாய நிலங்களில் சட்ட விரோதமாக மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

30அடி ஆழத்தில் இருந்த ஆற்றுப்பகுதி தற்பொழுது 50 அடிக்கும் மேலாக மணல் அகழ்வால் பாதிப்படைந்துள்ளது இதனால் அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் தமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ள தாகவும் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுப்பதற்கு பொலிஸார், உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமக்கான வாழ்வாதார நிலங்களை பாது காத்துத் தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-316)

# இந்திய உயர்ஸ்தானிகரை சந்திக்க கோரிக்கை விடுத்த மைத்திரிபால

## நிராகரித்தது இந்தியா

(கொழும்பு)



கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரை சந்திப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருப்பதாக மைத்திரி வாக்குமூலம் வழங்கியதாக அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே குறித்த சந்திப்பிற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, கால அவகாசம் கோரியிருந்தார். எனினும் அந்த கோரிக்கையை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு எதிராக மைத்திரிபால சிறிசேனவுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடும் பணிகள் நிறைவு

## மோட்டார் போக்குவரத்துத்துறை

(கொழும்பு)

தற்காலிக சாரதி உரிமம் பெற்ற சாரதிகளுக்கு நிரந்தர சாரதி உரிமம் வழங்கத் தொடங்கியுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 3 மாதங்களுக்குள் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் பணிகள் நிறைவடையும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

நாளாந்தம் பத்தாயிரம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தப்பட்ட சாரதிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார். வாகன இலக்கத் தகடுகளில் உள்ள மாகாண எழுத்துக்களை அகற்றும் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-6)

# அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணமில்லை

## மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளும் உத்தேசம் தமக்கு கிடையாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் காலங்களிலும் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குமாறு இதுவரையில் தம்மிடம் எவரும் கோரவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அல்லது வேறு கட்சியின் அரசியல் தலைவர்கள் எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்குமாறு கோரியதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல அரசியல்வாதிகள் தம்மை சந்திக்க வருவதுடன் அவர்கள் தமது சகல நலன்களை விசாரித்து செல்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 250 | 100 | 130 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 100 | 150-180 |
| தக்காளி | 100 | 100 | 100 | 80-100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 120-130 |
| கோவா | 200 | 200 | 200 | 200 |
| கரட் | 300 | 350 | 400 | 280 |
| பூசணி | 150 | 130 | 140 | 80-100 |
| புடோல் | 150 | 150 | 140 | 100 |
| வாழைக்காய் | 200 | 120 | 120 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 100 | 150-300 |
| பெரிய வெங்காயம் | 550 | 560 | 650 | 300 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 200 | 150 | 100 | 100-120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- |
| பயற்றங்காய் | 150 | 200 | 180 | 150-250 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 130 |
| பீற்றூட் | 250 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 600 | 900 | 600 | 300-650 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 200 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 60 | 40-70 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 200-400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 120 | 100 | 60-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 |

# தலாய் லாமாவின் இலங்கை விஜயத்தை எதிர்க்கும் சீனா-பௌத்த தலைவர் சாடல்

(கொழும்பு)

திபெத்திய பௌத்த ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவின் இலங்கை நாட்டிற்கான விஜயத்தை சீனா தடுத்து வருவதாக இலங்கையின் உயர்மட்ட பௌத்த தலைவர் வஸ்கடுவே மஹிந்தவங்ச தெரிவித்துள்ளார்.

புத்தரின் கபிலவஸ்து நினைவுச்சின்னங்களின் ஒரு பகுதியை தலாய் லாமாவிடம் ஒப்படைப்பதற்காக இந்தியாவுக்கு சென்றுள்ள நிலையில், இந்திய ஊடகம் ஒன்றின் பிரத்தியேக நேர்காணலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது. "நாங்கள் தலாய் லாமாவை மதிக்கிறோம், அவரை இலங்கைக்கு [illegible]தோம் ஆனால் சீனா அதை விரும்பவில்லை.

எங்கள் அரசுக்கு எதிராக சீனா அழுத்தம் கொடுத்தது எங்களுக்கு அது பிடிக்கவில்லை.

அவர் ஒரு பௌத்த தலைவர் அவருக்கு சுதந்திரம் உள்ளது. அழைப்பு விடுக்கும் சுதந்திரம் எமக்கு உள்ளது." என [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டொலர் இருப்பு வரிகளை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் டொலர் கையிருப்பு தற்போது அதிகரித்துள்ளதுடன், எதிர்காலத்தில் வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலின் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், 2022 மே மாதத்தில் நாட்டில் இருந்த நிலைமையையும் இன்று நாட்டின் நிலைமையையும் பார்க்கும் போது ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தெளிவாகத் தெரிகிறது.

இது எல்லா இடங்களிலும் பரிணமிக்கின்றது. டொலர் இருப்பு அதிகரித்திருப்பதுடன், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இன்றி கிடைத்து வருகின்றன.

அரசாங்கத் துறையில் சம்பள உயர்வு சாத்தியமாகியுள்ளது.

எனவே எதிர் காலத்தில் வரிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.


சர்வதேச நாணய நிதியம் மட்டுமன்றி, உலக வங்கியும் வெளியிட்ட அறிக்கைகளைப் பார்த்தால் அரசாங்கத்தின் முயற்சிகளின் வெற்றி தெரியும். உலகின் மற்றைய வீழ்ச்சியடைந்த 20 நாடுகளில் குறுகிய காலத்தில் மீட்சி பெற்ற நாடாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

**அக்கராயன் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் வ.து பதிவு எண்**
**KN/150**
**மூடிய கூறுவிலை கோரல்**

அக்கராயன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அம்பலப்பெருமாள் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கூரை வேலை செய்வதற்கு CANOPY மூடிய கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத் தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று மூடிய தபால் உறையில் தலைவர்,அக்கராயன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) அக்கராயன்குளம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ 25.04.2024ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் - 077 994 9150
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்குளம்,
கிளிநொச்சி. (391) T.P -021 313 3468

# நல்லூர் செல்லப்பா சுவாமிகள் குருபூசை



**ஈழத்து சித்தர் நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின்**

**குருபூசை தினம் இன்று**

நல்லூர் தேரடியில் தவமிருந்து தனது அகத்திலிருந்து தோன்றிய ஞானத்தினை

**எப்பவோ முடிந்த காரியம்**
**நாம் அறியோம்**
**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**முழுதும் உண்மை**

எனும் நான்கு மகா வாக்கியங்களாக உலகிற்கு வழங்கிய உத்தம ஞானி. உலகமெங்கும் சைவசமயம் பரவ மூல ஊற்றாக விளங்கிய யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோக சுவாமிகளை உலகிற்கு வழங்கிய உத்தம ஆசான் செல்லப்ப தேசிகர்.

நம்மில் பலர் அவரை விசர் செல்லப்பர் என்று அழைத்த போதும் மேலைத் தேசத்தவர் செல்லப்பா சுவாமிகளை உத்தம ஞானியாக கண்டு போற்றுகின்றனர். உலகின் பல பாகங்களில் இன்று செல்லப்பா சுவாமிகளின் குருபூசை பக்திபூர்வமாக கொண்டாடப்படுகின்றது.



**ஸ்ரீ சுப்ரமுனிய கோட்டம் கோப்பாய்,**
**ஸ்ரீ சுப்ரமுனிய ஆச்சிரமம் அளவெட்டி**

(அமெரிக்க, ஹவாய் சைவ ஆதீனத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள செல்லப்பா சுவாமிகளின் திருவுருவம்)

(378)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1993 - இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 14<br>உயரம் :170 CM<br>தகைமை/தொழில்: Bsc.விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. விரிவுரையாளர், வங்கியாளர் IT<br>தொ.இ: B/14409 | பிறப்பு -2000- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:<br>உயரம் : 157CM<br>தகைமை/தொழில்: A/L.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/14415 |
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA, CollegeTeacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், Teacher விரும்பத்தக்கது<br>தொ.இ: B/14410 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா:- 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc, Civil Engineer (pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer, (Civil, Mechanical) Doctor<br>தொ.இ: G/14418 |
| பிறப்பு:-1989- இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா:<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்:O/L, வயறிங் தொழில்<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14413 | பிறப்பு -1997- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:- 13<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND,Teacher(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.<br>தொ.இ: G/14419 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா-49<br>உயரம்: 170 CM<br>தகைமை/தொழில்:- Bsc,Msc Cyber Security Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி லண்டன் PR<br>தொ.இ: B/14417 | பிறப்பு -1996- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 35 1/4<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:HNDA, Finance Assistant(NGO)<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14422 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபா [illegible]**

# சேவை நலன் பாராட்டு



திரு.
**நாகலிங்கம் ஸ்ரீகரன்**
(SLTS 1, BSc, MPhil in Edu., PGDE, Dip.in Electronics & Telecommunication

**சேவை விபரம்**

சேவை முன் பயிற்சி - 20.01.1989- 30.01.1989
யா/நாவற்குழி ம.வி - 24.04.1989 - 30.04.1992
(கணிதம் - ஆசிரியர்)
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
01.05.1992- 08.07.2007
(பௌதிகவியல், கணிதம் - ஆசிரியர்)
யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி
09.07.2007- 30.09.2007 (கணிதம் - ஆசிரியர்)
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
01.10.2007- 18.01.2021
(பொறியியற் தொழினுட்பவியல், பௌதிகவியல் கணிதம் - ஆசிரியர் / பகுதித்தலைவர்)
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
18.01.2021 - 07.04.2024
(பொறியியற் தொழினுட்பவியல் - ஆசிரியர்)

**கல்வி**
ஆரம்பக்கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி - யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
உயர்தரக் கல்வி - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
இளமாணி கல்வி முதுதத்துவமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஓய்வுக்காலம் சிறக்கவும் ஆரோக்கியமான, சந்தோசமான வாழ்வு வாழ இன்றைய அறுபதாவது பிறந்த தினத்தன்று நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

(332)

வாழ்த்துவோர்-
ஆசிரியர் கழகம்
யா/ யாழ்.இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய மாணவர்களை சுட்டுக்கொன்ற அமெரிக்கருக்கு 22 ஆண்டுக்கு பிறகு மரண தண்டனை நிறைவேற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒக்ல ஹோமாவில் கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி இந்தியாவின் ஆந்திராவை சேர்ந்த மாணவர் சரத்பா புல்லூரு உட்பட 2 பேரை மைக் கேல் டிவைன் சுமித் என்பவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். இந்த வழ க்கு விசாரணை முடிவில் டிவைன் சுமித்துக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் 22 ஆண்டுகளுக்கு பிறகு அவ ருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மெக்அலெஸ்டரில் உள்ள ஒக்லஹோமா மாநில சிறை ச்சாலையில் டிவைன் சுமி த்துக்கு ஊசி மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்ப ட்டது. (நி-6)

# ஈரான் நிச்சய அமெ

(டெஹ்ற்ரான்)

## சிரியாவில் உள் நடத்திய வான்வழி வழங்குவோம் என

சிரியாவில் உள்ள ஈரான் தூத ரகம் மீது கடந்த திங்கட்கிழமை இஸ்ரேல் நடத்திய வான் தாக்கு தலில் ஈரான் இராணுவத்தின் மூத்த தளபதிகள் இருவர் உட்பட16 பேர் உயிரிழந்தனர்.

# நெதன்யாவுக்கு எதிராக திரண்ட மக்கள்



(டெல் அவிவ்)

பாலஸ்தீனத்தின் காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீதான இஸ்ரேலில் போர் 6 ஆவது மாதத்தைக் கடந்து ள்ளது. இதில் கர்சாவில் குழந்தைகள், பெண்கள் உட்பட 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள் ளனர்.

இந்நிலையில் விரை வில் தேர்தல் நடத்த வேண் டும் எனவும், பிரதமர் பதவி விலக வேண்டும் எனவும் கோரி இஸ்ரேலில் டெல் அவிவ் நகரில் பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

டெல் அவிவ் நகரில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சாலைகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் பிரதமர் நெதன்யாகு பதவி விலக கோரி கோஷங்கள் எழு ப்பினர். பொதுத் தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சில இடங்களில் போராட் டக்காரர்களுக்கும் பொலிஸா ருக்கும் இடையில் தள்ளு முள்ளு ஏற்பட்டது. (நி-6)

# இரு விமானங்கள் மோதியதால் லண்டனில் பரபரப்பு



(லண்டன்)

லண்டனில் அமை ந்துள்ளது ஹீத்ரு விமான நிலையம் எப்போதும் பரப ரப்பாகக் காணப்படும்.

இந்த விமான நிலை யத்தின் 3 ஆவது டெர் மினல் பகுதியில் வெர்ஜின் அட்லாண்டிக் போயிங் 787-9 ரக விமானம் பயணிகளை நேற்று முன்தினம் இறக்கிவிட் டது.

அப்போது அதே ரன் வேயில் வந்திறங்கிய மற்றொரு விமானத்தின் இறக்கை பகுதி லேசாக உரசியது.

இதில் இரு விமான ங்களின் இறக்கைகளும் சேதமடைந்தன.

இந்த விபத்தில் அதிர் ஷ்டவசமாக பயணிக ளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என விமான நிலைய நிர்வாகம் தெரிவித் தது. (நி-6)

# தொடரும் முறுகல் நிலையிலும் மாலைதீவுக்கு உதவிக்கரம் நீட்டிய இந்தியா



(மாலைதீவு)

இந்தியா, மாலைதீவுக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதிய ளித்துள்ள நிலையில் இந்தி யாவுக்கு அந்நாட்டு அமைச்சர் ஜமீர் நன்றி தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கு ஜனாதிபதி யாக முகமது முய்சு பதவியேற் றதில் இருந்து இரு நாடுகளு க்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

அவர் சீன ஆதரவு நிலைப் பாடு கொண்டவர் என்பதால் இந்தியாவுக்கு எதிரான நிலை ப்பாட்டையே தொடர்ந்து அவர் மேற்கொண்டு வந்தார்.

அத்தோடு மாலைதீவு அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் மோடியை விமர்சித்துப்பேசியதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியி ருந்தது.

இந்நிலையில் மோதல் போக்கு நிலவி வந்தாலும் மாலைதீவுக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றுமதி செய்ய இந்தியா அனுமதி அளித்துள் ளது.

அதன்போது சர்க்கரை, கோதுமை, அரிசி, வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய பொரு ட்களை மாலைதீவுக்கு இந் தியா ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளதாக தெரிய வந்து ள்ளது.

இதன் காரணமாக சரியான நேரத்தில் மாலைதீவுக்கு இந் தியா இந்த உதவியை செய்த மையால் தனது எக்ஸ் பக்கத் தில் அமைச்சர் ஜமீர் நன்றி தெரிவித்துள்ளார். (நி-6)

# 120 அடி தேர் க பெங்களூர் திருவி

(சென்னை)

பெங்களூர் ஆனைக்கல் அருகே பிரபல மதுராம்மா கோவில் திருவிழாவில் தேர் கவிழ்ந்து விபத்துக்குள் ளானதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பெங்களூர் நகர் ஆனை க்கல் தாலுகா ஹுஸ்கூர் கிராமத்தில் உள்ள மது ராமா கோவிலில் உள்ளது. இங்கு நடைபெறும் ஆண்டு திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது.

இந்த ஆண்டுக்கான திரு விழா நடைபெற்ற நிலை யில் ஏராளமான பக்தர்கள் கோயிலில் குவிந்திருந்த னர்.




திருவிழாவின் ஒரு பகுதியாக,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ன தூதரகம் மீது வான் தாக்குதல்
# யம் பதிலடி வழங்குவோம்
## மரிக்கா, இஸ்ரேலை எச்சரித்த ஈரான்

**ள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் ழித் தாக்குதலுக்கு நிச்சயம் பதிலடி ன ஈரான் எச்சரித்துள்ளது.**



இத் தாக்குதலக்கும் தங்களுக் கும் தொடர்பில்லை என அமெரிக்க பாதுகாப்புத்துறை தெரிவித்திருந்தது.

எனினும் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீதான தாக்குதலுக்கு நிச்சயம் பழி தீர்ப்போம் என ஈரான் அறிவித்துள்ளது.

இந்நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா அல்லது இஸ்ரேல் நாட்டு தூதரகங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் மீது அடுத்த வாரத்துக்குள் ஈரான் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)



# சிரியாவில் குண்டு வெடித்து 7 குழந்தைகள் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

தென்மேற்கு சிரியாவின் டரா மாகாணம் அருகே சாலையில் குழந்தைகள் சிலர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கே சாலையொரத்தில் புதைக்கபட்டிருந்த வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடிக்க தொடங்கின. பயங்கர சத்தத்துடன் சக்தி வாய்ந்த வெடி குண்டுகள் வெடித்தன.

இந்த வெடிகுண்டு விபத்தில் சிக்கி 7 குழந்தைகள் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்த 2 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-6)

# விழ்ந்து விபத்து
# விழாவில் பரபரப்பு



கோயிலுக்கு சொந்தமான 120 அடி உயரம் கொண்ட தேரை பொதுமக்கள் நகர் பகுதிகளில் இழுத்துச் சென்றனர்.

அப்போது தேர் எதிர்பாராத விதமாக திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

பொதுமக்கள் ஏராளமாக கூடியிருந்த நிலையில் தேர் கவிழப்போவதை உணர்ந்த அனைவரும் தப்பி ஓடியதால் எந்தவித உயிர் சேதமோ காயங்களோ ஏற்படவில்லை.

தற்போது இந்த வீடியோ காட்சிகள் சமூகவலை தளங்களில் வைரலாகி வருகிறது. (நி-6)

# ரஷ்யாவின் ஆறு போர் விமானங்களை தாக்கி அழித்த உக்ரைன்

(கீவ்)

ரஷ்யாவின் தென்பகுதி விமானத்தளம் மீது உக்ரைன் மேற்கொண்ட பாரிய ஆளில்லா விமானத் தாக்குதலில் ரஷ்யா வின் ஆறு போர் விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக உக்ரைனின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் 8 விமானங்கள் சேதமடைந்துள்ளதாகவும் குறி ப்பிடப்படுகின்றது.

உக்ரைனின் கார்கிவ் நகர் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதனையடுத்தே உக்ரைன் நேற்று முன்தினம் குறித்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இத் தாக்குதலில் 20 இற்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் காயமடைந்திருக்கலாம் அல்லது உயிரிழந்திருக்கலாம் எனவும் உக்ரைனின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் போர்முனையில் பயன்படுத்தப்படும் எஸ்யு 27- 34 விமானங்களின் மொரெ ஜொவ்ஸ்க் தளத்தின் மீதே இஸ்ரேல் ஆளில்லா விமானத்தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

உக்ரைனின் இத் தாக்குதல் குறித்து ரஷ்யா இதுவரை உத் தியோகப்பூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

எனினும் உக்ரைனின் 40 ஆளில்லா விமானங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைன் 40 இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்களை பயன் படுத்தியதால் ரஷ்யாவின் வான்வெளி பாதுகாப்பு பொறிமுறை செயற்பட முடியாத நிலை ஏற்படும் என பாதுகாப்பு ஆய்வாள ர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குங்குமப்பூ




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

குங்குமப்பூ மனித வாழ்வில் பல்வேறு வகைகளில் பயனளிக்கிறது. குழந்தைகளுக்கு குழந்தை மருந்தாகவும், குமரிகளுக்கு குமரிகளின் மருந்தாகவும், ஆண்களுக்கு ஆண்மை குறைவிற்கான மருந்தாகவும், பெண்களுக்கு பெண்களின் கருப்பை கோளாறுக்கு உபயோகமாகும், மருந்தாகவும் இது காணப்படுகிறது.

குங்குமப்பூவினால் தாது நட்டம், நாவறட்சி, குடல் வாதம், மேகநீர் சீல் பிடிப்பு, கபாதிக்கம், அதிகசாரம், பைத்தியம், விகுணவாதம், மண்டை வலி, கருவிழியிற் படருகின்ற பூ, கண்ணோய், வாந்தி, சலபீநிசம், காது மந்தம், நீர் ஏற்றம், வாயினிப்பு, பிரசவ மலினம் ஆகியவை நீங்கும் என்க.

குங்குமப்பூவினை உணவுப் பொருள்கட்கு நிறம் உண்டாக்குவதற்கும், மணம் உண்டாகுவதற்குமாக சேர்ப்பதும் உண்டு.

கர்ப்பிணிகள் இதனை வெற்றிலையோடு கலந்து உண்டாலும் பாலில் இட்டு காய்ச்சி அருந்தினாலும் இரத்தத்தை சுத்திகரிக்கும். பிரசவத்தை சுலபமாக்கும். சூதக்கட்டு, வலி, முதலியவையும் நீங்கும். தலைவலி, மூக்கு நீர்ப்பாய்ச்சல் இவைகளுக்கு இதை முலைப்பாலில் உரைத்து நெற்றியில் பற்றுப் போடலாம். இதனை அடின், விளாம்பிசின், பனை வெல்லம் இவைகளுடன் சேர்த்தரைத்து துண்டு தடவி கன்னப்



பொறியின் மீது போட வலி நீங்கும். மருந்துகளுக்கு துணை மருந்தாகவும் இதனை சேர்க்கலாம்.

இவற்றில் ஊதா நிறப் பூக்கள் வளம்மிக்க விதைகளை உருவாக்குவதில்லை. நிலத்திற்கு கீழே இருக்கும் குமிழ் போன்ற மாச்சத்து சேமிக்கும் தண்டுக் கிழக்குகளைத் தோண்டியெடுத்து சிறுதுண்டுகளாக உடைத்து திரும்பவும் நட வேண்டும்.

காஷ்மீரில் ஏழாயிரம் அடி உயரத்தில் குங்குமப்பூவின் தண்டிக் கிழங்குகளை 20 சென்றிமீற்றர் இடைவெளி விட்டு நீண்ட வரிசைகளில் ஆடி மாதம் நடுகின்றார்கள்.

செடிகள் வளர்ந்து மலர்கள் பூத்த பின் வசந்த காலத்தில் மலர்களை பறித்து சூலகமுடிகளை சேகரிக்கின்றனர். காலையில் மலரும் பூக்கள் மாலையில் விழத் தொடங்கும்.

பூக்களில் நறுமண எண்ணெய் இருப்பதால் சூலகத் தண்டு, சூலகமுடிகளை அரை விட்டமுள்ள கம்பி வலை பெட்டியிலிட்டு சிறிய வெப்பம் வரும் அடுப்பில் வைத்து 30-45 நிமிடங்கள் வரை உலர்த்த வேண்டும். இதன் உலர்ந்த சூலகத் தண்டு, சூலக முடி குங்குமப்பூ என அழைக்கப்படும்.

குங்குமப்பூவில் எளிதில் ஆவியாகும் நறுமணம் தருகின்ற சேர்மானங்கள் 150 இற்கும் அதிகமாக உண்டு . இதில் பல ஆவியாகாத செயல்மிகு கூறுகளும் உண்டு. இவற்றில் சீயாக்காற்றின், லைக்கோப்பின் மற்றும் மீற்றர் கரோட்டின் ஆகியன உள்ளன.


குங்குமப்பூவின் கசப்பான சுவைக்கும் குழுக்கோசைட்டு, டாக்ரோகுரோசினை காரணமாகும். உலர் குங்குமப்பூவை காற்றுப் புகாத கொள்கலனில் சேமிக்க வேண்டியது கட்டாயமாகும்.

### மருத்துவ குணங்கள்

மருந்து தயாரிப்புக்கு தரமான குங்குமப் பூக்களையே பயன்படுத்த வேண்டும்.

குழந்தைகளுக்கு பயன்படும் முக்கூட்டு, கோரோசனை மாத்திரைகளிலும் முக்கிய மூலப் பொருளாகச் சேர்க்கப்படுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்கள் கர்ப்பம் தரித்து ஐந்து மாதங்களின் பின்பிருந்தே குங்குமப்பூவைப் பயன்படுத்த வேண்டும். இதனால் பேறுவலி



சுலபமாக்கப்படும்.

மாலைக் கண் நோய் வராமல் தடுக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கூடியது. கட்டிகளைக் கரைத்து புற்று நோயினைத் தடுக்கும் வல்லமையுண்டு.

ஐந்து கிராம் குங்குமப்பூவை 3 அவுன்ஸ் கோப்புகியாளத்தில் உரைத்து உள்ளுக்கு கொடுக்க எளிதில் பிரசவமாகும்.

பத்து கிராம் குங்குமப்பூ சிறிது நீர் விட்டு அரைத்து உள்ளுக்கு கொடுக்க மரித்த சிறு வெளியாகும்.

குங்குமப்பூவை சிறிது முலைப் பாலில் கரைத்து வடிகட்டி கண்களில் இரண்டொரு துளி விட்டுக் கொண்டு வர கண்ணீர் முட்டல் குணமாகும்.

முலைப்பால் விட்டு அரைத்து நெற்றிக்கு பற்றுப்போட தலைவலி நீங்கும்.

சில பெண்கள் வயதாகியும் பருவமடையாமல் இருக்கும்.

(தொடரும்)

# இன்று ஒரு தகவல் 88



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அபூர்வ தற்காப்பு அமைப்பு

அமெரிக்காவிலே வட பகுதியிலே மிக்சிகன் ஏரி என்று ஒரு ஏரி! அந்த ஏரியிலே ஜனவரி மாதத்தில் தண்ணீர் இருக்காது. வேறு என்ன இருக்கும் என்று கேட்கிறீர்களா? பனிக்கட்டித்தான் இருக்கும். குளிர் அதிகமாக இருப்பதனாலே தண்ணீர் எல்லாம் உறைந்து போய் இருக்கும். அந்த நேரத்திலே அங்கே சென்று எல்லோரும் சறுக்கு விளையாட்டு விளையாடுவது வழக்கம்.

1984 ஆம் வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி! அன்று ஒரு அப்பாவும் பிள்ளையும் அங்கே சென்று விளையாடிக் கொண்டு இருந்தார்கள். அந்தப் பையன் பேர் ஜிம்மி. 4 வயதுப் பையன்! திடீரென்று என்ன நடந்தது தெரியுமா? அந்த ஐஸ்தரை பிளந்து விட்டது! அந்தப் பையன் உள்ளே போய்விட்டான்! அந்த நேரத்திலே இதையாரும் கவனிக்கவில்லை! பையனைக் காணவில்லை என்று தேடிக்கண்டு பிடிப்பதற்குள்ளே 20 நிமிடம் ஆகிவிட்டது. கடைசியாக அவனைக் கண்டுபிடித்து வெளியிலே இழுத்துப் போட்டார்கள்! பார்த்தால்... பையன் உறைந்து போய்விட்டான்! மூச்சு வரவில்லை! இதயத்துடிப்பு நின்று போய்விட்டது! மூச்சும் இல்லை! நாடித் துடிப்பும் இல்லை! அப்படி என்றால் என்ன அர்த்தம்! பையன் செத்துப்போய் விட்டான் என்று தானே அர்த்தம்! இருந்தாலும் அங்கே இருந்தவர்கள் முயற்சியை கைவிடவில்லை! பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்குத் தகவல் கொடுத்தார்கள்!

உடனே அங்கே இருந்த டொக்டர்கள் மின்னல் வேகத்திலே ஹெலிகொப்டர்லே பறந்து வந்தார்கள்! உறைந்து போய்க்கிடந்த அந்தப் பையனுக்கு உடனடியாக ஹார்ட் மசாஜ் கொடுத்துப் பார்த்தார்கள்! இரத்தக்குழாய் வழியாக மருந்துகள் எல்லாம் செலுத்தினார்கள்! நுரையீரலுக்குள்ளே தொடர்ந்து காற்றை பம்ப செய்தார்கள்! தசையெல்லாம் நாசமடையாமலே இருக்க வேண்டுமே... அதற்காக ஹீட்லேம்ப்களை உடம்பு மேலே பரப்பி உடம்பை சூடாக்கினார்கள். இவையெல்லாம் சரி! இருந்தாலும் இதயத்தை ஓட வைக்க வேண்டுமே. அதுதானே முக்கியம்! அதற்காக ஐந்து தடவை எலக்ட்ரிக் ஷாக் கொடுத்து பார்த்தார்கள்! பிரஜோசனமே இல்லை!

இருந்தாலும் கொஞ்ச நேரத்திலே ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. என்ன நடந்தது தெரியுமா? இறந்து போன நிலையிலே இருந்த அந்தப் பையன் லேசாக மாறி கோமா நிலைமைக்கு வந்தான்! அதாவது மூச்சு மட்டுமே லேசாக ஓடிக் கொண்டு இருக்கும். மற்றப்படி எல்லாம் செத்தது மாதிரித் தான்! அதன் பிறகு என்ன செய்தார்கள் தெரியுமா? அந்தப் பையனைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனைக்கு போய்விட்டார்கள்! மிக்சிகன்லே குழந்தைகளுக்கான மெமோரியல் மருத்துவமனை ஒன்று இருக்கின்றது. அங்கே தான் இவனை அவசரமாக தூக்கிக் கொண்டு பறந்தார்கள்! இது மாதிரி கேஸ்லே கோமாவிலே இருந்து திடீரென்று மீண்டால் கூட ஆபத்துகள் தானாம். ஆமாம்! கோமாவிலேயிருந்து திடீரென்று மீண்டால் மூளை வீங்கிப் போய்விடுமாம்! இதற்காக அந்தப்பையனுக்கு மருந்துகள் எல்லாம் கொடுத்து. அந்த மயக்க நிலைமையிலேயே வைத்து இருந்தார்கள்! சுமாரா 80 நாள் டொக்டர்களுக்கும் அந்தப் பையனுக்கும் போராட்டம் தான் அதன் பிறகு தான் நம்பிக்கை வந்தது!

ஆமாம் அந்தப் பையன் மெல்ல கண்ணைத் திறந்து பார்த்திருந்தான்! எல்லோருக்கும் சந்தோஷம்! அதன் பிறகு ஒரு வாரம் கழித்து மெதுவாக சிரித்து இருக்கின்றான்! அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கை, கால்களை அசைத்து இருக்கின்றான்! நாலைந்து மாதத்திலே வீட்டிற்கு வந்து விட்டான்! இது ஆச்சரியமான நிகழ்வு தான்!

ஏன் என்றால் இருபது நிமிட நேரத்திற்கு ஐஸ் தண்ணீரிலே ஒரு 4 வயது பையன் மூழ்கியிருக்கிறது சாதாரண விடயம் இல்லை! ஒக்சிசன் இல்லாத நிலைமையிலே மூளை கெட்டுப் போய்விடும்! பிழைக்கவே முடியாது! அப்படி இருந்தும் அந்தப் பையன் பிழைத்தது எப்படி? அந்த டொக்டர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால்... நவீனமான சிகிச்சை முறைகள் தான் இதற்கு மிகவும் உதவியாக இருந்தது. உண்மைதான் இருந்தாலும் அந்தப் பையன் பிழைப்பதற்கு முக்கிய காரணம்... அவன் உடம்பிற்குள்ளே இருந்த விசித்திரமான தற்காப்பு மெக்கானிசம் தான் என்றார்கள்!

அது என்ன தற்காப்பு மெக்கானிசம்? இப்போது திமிங்கலம்... ஸீல் இது மாதிரி கடல் பிராணிகள் இருக்கின்றது அல்லவா? இவையெல்லாம் அடிக்கடி ஐஸ் தண்ணீரிலே டைவ் செய்ய வேண்டியிருக்கும்! அப்படி செய்யும் போது நெர்வஸ் சிஸ்டம் மூளைக்கு சிக்னல் கொடுக்கிறது. உடனே என்ன ஆகும் என்றால்...ஒக்சிசன் நிரம்பிய இரத்தம் அத்தனையும் பாதுகாப்பாக மூளைக்கும் இதயப்பகுதிக்கும் டைவர்ட் ஆகிவிடுகிறது! அதாவது அங்கே போய் சேர்ந்து விடுகிறது. இந்த நிலைமையிலே உடம்பு உறைந்து போனால் கூட கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஒக்சிசனை இரத்தம் இதயத்திற்கும், மூளைக்கும் சப்ளை செய்து அவையெல்லாம் கெட்டுப் போகமல் காப்பாற்றப்படுகின்றது!

திமிங்கலத்திற்கு இருக்கின்ற இந்த ஸ்பெசல் மெக்கானிசம் லட்சக்கனக்கான மனிதர்களிலே ஒருவர் இரண்டு பேருக்கு அதிசயமாக இருக்கின்றது! அதிஷ்டவசமாக இந்தப் பையனும் அதுமாதிரியான ஆட்களிலே ஒருத்தனாக இருந்துவிட்டான்! அதனாலே பிழைத்துக் கொண்டான்.

இது என்ன பெரிது...? அந்தாட்டிக் ஆராய்ச்சியிலே வெட்டல் என்கின்ற கடலுக்கு தென்புறத்திலே சில வகை மீன், நண்டு இவையெல்லாம் பனிநீரிலேயே பக்குவமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றதாம்! உயிரியல் வல்லுநர்களே ஆச்சரியப்படுகின்றார்கள்! இதனுடைய மெக்கானிசம் [illegible] என்று தெரிந்து கொண்டால் அது நமக்கு பல விதத்தில் [illegible] இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இவ்வருட இறுதிக்குள் கண்ணிவெடி அகற்றும் பணி பூர்த்தியாகும்

## வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இவ் வருட இறுதிக்குள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தையொட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.


கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போது, 2030 ஆம் ஆண்டுக்கு பின்னரே இலங்கையை கண்ணிவெடி அற்ற நாடாக பிரகடனப்படுத்த முடியும் என்ற ஒரு நிலைப்பாடு எழுந்ததாகவும், எனினும் இந்த வருட இறுதிக்குள் பெரும்பாலான வகையில் கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குள் செல்லக்கூடிய நிலை ஏற்படும்.

அதேவேளை பூநகரி மற்றும் முகமாலை பகுதிகளில் அதிகளவு கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். மீள் குடியேற்ற செயற்பாடுகளை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

மேலும் குறித்த செயற்பாடுகளில் தங்களின் உயிர்களை பணயம் வைத்து பணியாற்றுபவர்களின் சேவைக்கு நன்றிகளையும் தெரிவித்தார். (நி-6)

# பூநகரி வாடியடி பகுதியில் டிப்பர்-மோ.சைக்கிள் விபத்து

## இருவர் படுகாயம்



(முறிகண்டி)

கிளிநொச்சி பூநகரி வாடியடி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று காலை 7.30 மணியளவில் பூநகரி வாடியடிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளை, கிளிநொச்சியிலிருந்து யாழ் நோக்கி பயணித்த டிப்பர் மோதியுள்ளது.

விபத்தில் 52 மற்றும் 63 வயதுடைய இருவர் படுகாயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டியில் ஏற்றப்பட்டு பூநகரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-100)




# கரும்புள்ளியான்-மல்லாவி இணைப்பு வீதி புனரமைப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் கரும்புள்ளியானில் இருந்து மல்லாவி செல்லும் இணைப்பு வீதிபுனரமைப்பு வேலைகள் முன்னெடுப்பு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் இறுதியாக நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இவ் வேலைகள் நடைபெறுகின்றன. கிரவல் மண் கொண்டு குறித்த வீதி புனரமைப்பினை மாந்தை கிழக்கு பிரதேச சபை முன்னெடுத்து வருகின்றது.

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எல்லைப் பரப்பில் கிடைக்கின்ற நிதியினை பயன்படுத்தி முக்கியமான வீதிகளை புனரமைக்கும் பணிகளை பிரதேச சபை முன்னெடுத்துள்ளது. (நி-6-350)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3084


கதிரேஷ்




வைசால்




நமசியா




சுந்தர்




யுவன்




சுவஸ்திகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 449





இந்தப் பிரயாணத்தில் அப்படி ஏதாவது எனக்கு நேர்ந்துவிட்டால் என் தந்தையை நான் சந்திக்க முடியாமல் போய்விட்டால் நீ சக்கரவர்த்தியிடம் போக வேண்டும். எப்படியாவது அவரைச் சந்தித்து என் பெரியம்மை உயிரோடிருக்கிறாள் என்பதை அவரிடம் சொல்ல வேண்டும். அவர் இஷ்டப்பட்டால் அந்த மூதாட்டியை அவரிடம் அழைத்துப் போக வேண்டும். இந்தக் காரியத்தையெல்லாம் செய்வாயா பூங்குழலி?"

"தங்களுக்கு ஒரு கண்டமும் நேராது. அபாயம் தங்களிடம் நெருங்கப் பயந்து ஓடும். கட்டாயம் பத்திரமாய்த் தஞ்சாவூர் போய்ச் சேர்வீர்கள்."

"ஒருவேளை எனக்கு ஏதாவது நேர்ந்தால் நான் கோரியபடி செய்வாய் அல்லவா?"

கட்டாயம் செய்கிறேன், இளவரசே!

இந்த முக்கியமான காரியத்தை வேறு யாரிடம் நான் ஒப்புவிக்க முடியும்? நீயே சொல் பார்க்கலாம்.

என்னிடம் ஒப்புவிக்க வேண்டிய காரியத்தை ஒப்புவித்தாகி விட்டது. இத்துடன் என் உபயோகம் தீர்ந்து விட்டதல்லவா? நான் விடை பெற்றுக் கொள்ளலாமா?" என்றாள் பூங்குழலி. அவளுடைய குரல் கண்ணீரின் ஈரப் பசையோடு கலந்து வந்தது.

ஆகா! அது எப்படி? தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தை இன்னும் நாம் அடையவில்லையே? சோழ நாட்டுப் போர்க்கப்பல்களை இன்னும் காணவில்லையே? அதற்குள் எப்படி விடை பெற்றுக் கொள்ளலாம்? கோபித்துக் கொள்ளாதே! இன்னும் சிறிது நேரம் பல்லைக் கடித்துக் கொண்டு என்னுடைய சக வாசத்தைப் பொறுத்துக் கொள். யானை மேல் மறுபடியும் ஏறி இன்னும் கொஞ்ச தூரம் என்னுடன் வா! புலிக்கொடி பறக்கும் கப்பலைத் தூரத்தில் கண்டதும் நீ என்னை விட்டுப் பிரிந்து செல்லலாம்!" என்றார் இளவரசர்.

மறுமொழி ஒன்றும் சொல்லாமல் பூங்குழலி யானை நின்ற இடத்தை நோக்கி நடந்தாள் இளவரசரும் சென்றார். அவருடைய வார்த்தைக்குப் படிந்து யானை மண்டியிட்டுப் படுத்தது. இருவரும் அதன் முதுகில் ஏறிக் கொண்டார்கள். முன்போல் யானையை இளவரசர் விரட்டவில்லை. ஆயினும் விரைவாகவே நடந்து சென்றது.

"சமுத்திரகுமாரி! எனக்கு மிகவும் பிடித்த சில காரியங்களைப் பற்றிச் சொன்னேனே? உனக்குப் பிடித்தவை என்னவென்று சொல்ல வேண்டாமா?" என்றார் அருள்மொழிவர்மர்.

"எருமை வாகனத்தின் மீது வரும் எமனை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். நள்ளிரவில் பாறை உச்சியின் மீது நின்று கொண்டு கொள்ளிவாய்ப் பிசாசுகளை நேரம் போவதே தெரியாமல் பார்ப்பதற்கு ரொம்பவும் பிடிக்கும்"

"நல்ல விசித்திரமான குணமுள்ள பெண் நீ!"

"தங்கள் சிநேகிதர் கூறுவதை போல் பைத்தியக்காரப் பெண் என்று சொல்லுங்கள். அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். அப்புறம் சிறிய படகில் ஏறி அலை கடலின் நடுவில் போய்க் கொண்டே இருப்பதற்கும் பிடிக்கும். அதிலும் கடலில் சுழற்காற்று அடித்தால், என் உற்சாகம் எல்லை கடந்துவிடும். அப்போது படகு ஒருசமயம் அலை ஊச்சியில் ஏறி வானுலகத்தை எட்டிப் பிடிக்கும் மறுகணம் பாதாளத்தில் தடாலென்று விழும். அதைப் போல் எனக்குப் பிடித்த காரியம் வேறொன்றுமில்லை. சற்று முன்னால் இந்த யானை வெறி கொண்டதுபோல் ஓடி வந்ததே, அப்போதும் எனக்கு அவ்வளவு உற்சாகமாகவே இருந்தது!"

"ஆ! பூங்குழலி! முருகப் பெருமான் உன்னுடைய புன்னகையை நாடி வந்திருந்தால் அடியோடு தோற்றிருப்பார்! யானை முகனை அனுப்பிக் குறமகள் வள்ளியைப் பயமுறுத்தினாரே, அந்த யுக்தி ஒன்றும் உன்னிடம் பலித்திராது!" என்றார் இளவரசர்.

அவர்கள் தொண்டைமான் நதியின் முகத்துவாரத்தை அணுகியபோது, "ஆ! இது என்ன?" என்று பூங்குழலி கூச்சலிட்டாள்.

"என்ன? என்ன?" என்று இளவரசர் ஆவலுடன் கேட்டார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஓவியத்தின் விலை

(நேற்றைய தொடர்ச்சி..)

"ஒரு வாரம் சென்று வாருங்கள். உங்களைப் போலவே ஓவியம் இங்கு இருக்கும். அதில் குறை இருந்தால் பணம் தர வேண்டாம்," என்றார் பீர்பால். "அந்த ஓவியத்திலும் எப்படியும் குறை கண்டுபிடித்து பணம் தராமல் தப்பிக்கலாம்' என்று புறப்பட்டான் ராஜன்.

"நீ ஓவியம் ஏதும் வரைய வேண்டாம். அடுத்த வாரம் இங்கு வா. பணத்துடன் செல்லலாம்," என்றார். ஒரு வாரம் சென்றது.

பீர்பாலின் மாளிகைக்கு ஓவியன் முதலில் வந்தான். பிறகு ராஜன் வந்தான். "உங்களைப்



போலவே வரையப் பட்ட ஓவியம் இது. திரைச் சீலையால் மூடப்பட்டுள்ளது. சீலையை விலக்கிப் பாருங்கள். சிறு குறையும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது," என்றார்.

"எப்படியும் வரைந்து இருக்கட்டும். குறை கண்டுபிடித்து விடலாம்' என்று திரையை விலக்கினான் அவன். அங்கே அவனைப் போலவே ஓவியம் இருந்தது. ஆனால், அந்த ஓவியம் அசைந்தது கண்களை இமைத்தது. அது ஓவியம் அல்ல, எதிரே உள்ளவர் வடிவத்தை அப்படியே காட்டும் நிலைக்கண்ணாடி. அதில் தன் வடிவம் தெரிகிறது' என்பது அவனுக்குப் புரிந்தது.

"அமைச்சரே! இது ஓவியம் அல்ல. முகம் பார்க்கும் கண்ணாடி," என்றான் அவன்.

"கண்ணாடியில்தான் நம் வடிவம் அப்படியே தெரியும். குறை எதுவும் காணமுடியாது. ஓவியம் என்றால் குறைகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் கண்ணாடியை எடுத்துச் செல்லுங்கள். ஓவியனுக்கு இரண்டாயிரம் பணம் தாருங்கள்," என்றார் பீர்பால்.

"அமைச்சரே! இது நியாயம் அல்ல!" என்றான் அவன். "நியாயத்தைப் பற்றி நீங்கள் பேசாதீர்கள். குறையே இல்லாமல் யாராலும் ஓவியம் வரைய முடியாது. இதை அறிந்த நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த ஓவியங்களை எத்தனை முறை வரையச் சொன்னீர்கள்?

"நம் வடிவம் கண்ணாடியில்தான் குறை இன்றித் தெரியும். இரண்டாயிரம் பணம் தந்து இதை வாங்கிச் செல்லுங்கள். இல்லையேல் ஏமாற்ற முயன்றதற்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்," என்றார் பீர்பால்.

"ஆயிரம் பணம் கொடுத்து அந்த ஓவியத்தையே வாங்கி இருக்கலாம். வீட்டில் அழகாக மாட்டி வைத்து இருக்கலாம். எல்லாரும் பார்த்து மகிழ்ந்து இருப்பர். பத்துப் பணம் பெறாத கண்ணாடி இது. இதற்கு இரண்டாயிரம் பணம் தர வேண்டி வந்ததே' என்று தன்னையே நொந்து கொண்டான் அவன்.

ஓவியனிடம் இரண்டாயிரம் பணம் தந்தான். அந்தக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வருத்தத்துடன் சென்றான் பணக்காரன்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகாரத்தைக் கேட்பதன் தார்ப்பரியம் என்ன?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின், அதற்கான ஒரே வழி அதிகாரப் பரவலாக்கம் என்பது கற்றறிந்தவர்களின் முடிவு.

அதாவது இலங்கை என்ற நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கம் இருக்கும்போது அந்தந்த மாகாணங்கள் தத்தம் களநிலைமைக்கு ஏற்ப தீர்மானங்களை எடுக்க முடியும்.

இவ்வாறு கால சூழலுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பதன் மூலம் அந்தந்தப் பிரதேச மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன், குறித்த பிரதேசத்தின் வெப்ப தட்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பதும் சுலபமாகும்.

இதன்மூலம், குவிந்த அதிகாரத்தைக் கொண்ட மத்திய அரசை நோக்கிய குற்றச்சாட்டுக்கள் வெறுதாக்கப்படும் எனக் கருதப்பட்டது.

இந்த அடிப்படையில்தான் 13ஆவது திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

அதிலும் 13ஆவது திருத்தச் சட்டமூலம் என்பது வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில், அந்த மக்கள் தங்கள் சார்பான தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு கொண்டு வரப்பட்டதாகும்.

இருந்தும் ஒரு தரப்புக்கு அதிகாரப் பரவலாக்கம் வழங்குவதில் உடன்பாடு காண முடியாத ஆட்சியாளர்கள், அனைத்து மாகாணங்களுக்கும் அதே அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஒரு சமத்துவத்தைப் பேணலாம் எனக் கருதியதன் காரணமாக, மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது.

இதனடிப்படையில் மாகாண ஆளுநர், மாகாண அமைச்சுகள், மாகாணத் திணைக்களம் என்ற நிர்வாகக் கட்டமைப்பின் மூலம் பொருத்தமான தீர்மானங்களை எடுத்து அதனை அமுல்படுத்த முடியும்.

இவ்வாறு மாகாண சபை நிர்வாகம் கொண்டு வரப்பட்டபோதுதான் ஓர் உண்மை உணரப்பட்டது.

அதாவது அதிகாரப் பரவலாக்கம் வழங்கப்பட்டாலும் அதனை துணிச்சலோடு அமுலாக்கக்கூடியவர்கள் தேவை என்பதுதான் அந்த உண்மை.

ஆம், முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்கள்; குறித்த அதிகாரத்தைக் கையிலெடுத்து அதனை அமுலாக்க வேண்டும்.

மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாகாண ஆளுநரும் அமைச்சின் செயலாளர்களும் மாகாண சபைகளுக்குரிய அதிகாரத்தை நிலைநிறுத்தி மக்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

என்ன செய்வது எவருக்கும் துணிவும் திராணியும் இல்லை என்ற போது அதிகாரப் பரவலாக்கம் என்பது அர்த்தமற்றதாயிற்று.

உண்மை. இன்றிருக்கக்கூடிய நிலையில் வடக்கு மாகாணத்தில் கடும் வெயில் கொட்டுகின்றதாயினும் அதற்காக, சில கட்டுப்பாடுகளைக்கூட தீர்மானமாக்க முடியாமல் உள்ளது. இதனால் பிள்ளைகளும் மாணவர்களும் கடும் வெயிலில் வதங்கிப் போகின்றனர்.

இந்தளவில்தான் எங்கள் நிலைமையுள்ளதெனில், அதிகாரத்தைக் கேட்பதன் தார்ப்பரியம்தான் புரியவில்லை.

### வடக்கில் நிலவும்

# ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுங்கள்

## கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றங்களை கோட்டக்கல்வி பணிப்பாளர்களும், வலயக்கல்விப் பணிப்பாளர்களும் மேற்கொண்டு வருவதால், பல பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இந்த விடயம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சுக்கு அறிக்கையிடாமல் காணப்படுவதும் பாரிய ஒரு சிக்கல் நிலையாகவே காணப்படுகின்றது.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உரிய தரவுகளை சேகரித்து பொருத்தமான நடைமுறைகளை பின்பற்றி ஆசிரியர்களை நியமித்து வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நிறைவு பெற்றிருக்கின்ற நிலையில் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட உள்ளது என ஆளுநர் தெரிவித்தார். (நி-6)

## காசாவின் மிகப்பெரிய வைத்தியசாலையை முற்றிலுமாக அழித்த இஸ்ரேல்

(காசா)

அல்-ஷிஃபா மருத்துவமனை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அல்-ஷிஃபா மருத்துவமனை காசா பகுதியில் செயற்பட்டு வந்த மிகப்பெரிய மருத்துவமனை ஆகும்.

குறித்த மருத்துவமனை தற்போது முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும், அங்கு முற்றிலும் சிதைக்கப்பட்ட 5 சடலங்கள் இருந்ததாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. ஹமாஸுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் இராணுவம், அல்-ஷிஃபா மருத்துவமனையில், தீவிரவாதிகள் தங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அங்கு தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அதன்பிறகு அந்த இடத்தைப் பார்வையிட்ட உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுக் குழு, மருத்துவமனை முற்றிலும் சேதமடைந்திருப்பதாக தெரிவித்துள்ளது. (நி-6)

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் முல்லைத்தீவிற்கு விஜயம்

(கண்டாவளை)

மலர இருக்கும் 2024 ஆம் ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் வன்னிப் படைத்தலைமையகம், 59 ஆவது படையணி, 64 ஆவது படையணி, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ப்ரமித்த பண்டார தென்னக்கோன் கலந்து சிறப்பித்ததுடன் நிகழ்வினை ஆரம்பித்தும் வைத்தார்.

சித்திரைப் புத்தாண்டின் பண்பாட்டு விழுமியங்களை மாதிரி வடிவில் உருவாக்கியிருந்ததுடன் ஆற்றுகையினையும் நிகழ்த்தியிருந்தனர். இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.ஜெயகாந், வன்னி படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர்ஜென்ரல் தினேஸ் நாணயக்கார, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ம.உமாமகள், 59 ஆவது படையணியில் தளபதி, 64 ஆவது படையணியின் தளபதி, மதகுருமார்கள், இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.(நி-6-315))

## கல்வி அமைச்சின் இணையத்தளத்தை சீரமைக்கும் பணி முன்னெடுப்பு

(கொழும்பு)

இணையத்தள தாக்குதலுக்கு உள்ளான கல்வி அமைச்சின் இணையத்தளத்தை சீரமைக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை கணனி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது.

அதன் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த சைபர் பாதுகாப்பு குறைபாடு மூலம் கல்வி அமைச்சின் இணையத்தளத்தை தாக்குபவர் அணுகியதாக தெரிவித்தார்.

சைபர் தாக்குதலுக்கு உள்ளான இணையத்தளத்திற்கு பதிலாக அனைத்து தரவுகளையும் கொண்ட புதிய இணையத்தளம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

அதேவேளை சைபர் தாக்குதலுக்கு உள்ளான இணையத் தளம் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை கணனி அவசரகால பதில் மன்றத்தின் பிரதம தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த மேலும் தெரிவித்தார். (நி-6)

## மதுபானசாலைகளுக்கு பூட்டு

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு மதுவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மேலும் எதிர்வரும் மே மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி, வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த 3 நாட்களும் மதுபானசாலைகளை மூடுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கமைய, மதுபானசாலைகளை மூடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் மே மாதம் 22, 23 மற்றும் 24 ஆம் ஆகிய தினங்களில் மதுபானசாலைகள் மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் ஆசிரியர் கல்வியாளர் சேவை வல்லுநர் சங்கம்

(கொழும்பு)

பல கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 29ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பிக்க அகில இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை வல்லுநர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரியை பல்கலைக்கழகமாக தரமுயர்த்துவது தொடர்பான வரைவை முன்வைத்தல், கல்லூரி விரிவுரையாளர்களுக்கு தடையில்லா பதவி உயர்வு முறையை நடைமுறைப்படுத்துதல், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அவர்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சுடன் அவ்வப்போது கலந்துரையாடப்பட்ட போதிலும் இதுவரையில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்காததால் அதனை வெற்றி கொள்ளும் நோக்கில் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் தம்மிக்க மிரிஹான தெரிவித்தார்.

மேலும், கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக தரம் உயர்த்துவது தொடர்பான வரைவு சட்ட வரைவுத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதை விரைந்து முடிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சிடம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலுக்கு முன் வரைவு நிறைவேற்றப்படாவிட்டால், செயன்முறை பின்னோக்கிச் செல்லும் என்றும் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஒல்லாந்த அலுவலாளர்கள் தம் கருமங்களை ஒழுங்கு செய்து அவற்றை முடித்து வெளியேறும் வரை நாட்டில் ஒருவித ஒழுங்கை நிலைபெறச் செய்வதே அவர்களது முதற் கடமையாயிற்று. கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, காலி, மன்னார் எனும் பிரதான நிலையங்களுக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். அவ்விடங்களில் நீதி பரிபாலனத்தை நடத்த இராணுவ நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.

**குடியியற் பாலனம்**

இறைவரி அறவிடும் பொறுப்பு றொபேட் அன்ட்றூஸ் என்ற சென்னை குடியியற் பாலன அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவன் இலங்கையின் குடியியற் தானிகராகவும் பிரதம இறை யாளனாகவும் நியமிக்கப்பட்டான். குடியியற் பாலனத்தையும் வரிச்சேகரிப்பையும் முன்னிட்டு அவன் இலங்கையை பழைய திசாவனிகளின் பிரிவுகளுக்கொப்ப மூன்று கலக்டர்களின் பிரிவுகளாகப் பகுத்தான். கொழும்புக் கலக்டர் பிரிவு, மாத்தறை தொடக்கம் சிலாபம் வரையிலுள்ள மாநிலம் முழுவதையும் உள்ளடக்கியது. திருகோணமலைப் பிரிவு மட்டக்களப்பையும் கீழ்க் கரையையும் கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பிரிவு, மன்னார், புத்தளம், கற்பிட்டி வரை உள்ள பிரதேசத்தைக் கொண்டது.

மூன்று கலக்டர்களும் தத்தம் பகுதிகளின் பாலனத்தை நடத்துவதற்காக சென்னையிலிருந்து ஆயிரக்கணகான அலுவலாளர்களை வரவழைத்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் சிங்கள திசாவைகளும், முதலியார்களும், தலைமைக்காரருமே உள்நாட்டு நிர்வாகத்துக்குப் பொறுப்பாய் இருந்தவர்கள்.

அன்ட்றூஸ், மக்களின் விருப்பு வெறுப்புக்கள் ஒன்றையும் பொருட்படுத்தாது, 1796 ஒகஸ்டில் முன்னிருந்தவர்களைப் பதவியிலிருந்து நீக்கி அவ்விடங்களை நிரப்ப ஆமில்தார்கள், கணக்குப் பிள்ளைகள், கண்காணிகள், இலிகிதர்கள், கொத்தவால்கள் என 32,000 அலுவலாள்களை சென்னையிலிருந்து வரவழைத்தான்.

குடியியற் சேவையின் சகல கருமங்களும் அவர்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டன. இச் சென்னை அலுவலாளர்கள் ஒரே நேரத்தில் "வரி அறவிடுவோராகவும், குத்தகைக் காரராகவும் நீதிபதிகளாகவும்" கடமையாற்றினர்.. அவர்கள் இலங்கையில் ஏற்படுத்திய இறைசேகரிப்பு முறையில் குறைகள் நிறையக் காணப்பட்டன. இறை சேகரிக்கும் உரிமைகள் ஏலத்தில் குத்தைகயாக விற்கப்பட்டன. இக்குத்தகையை, இறை சேகரிக்கும் சேவைக்குப் பொறுப்பாயிருந்த ஆமில்தார்கள் அல்லது அவர்களது உதவியாளர்களே வாங்கினர்.

இக் குத்தகைக்காரர் தமது சொந்த ஆதாயமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு கிராமங்களிலிருந்து எவ்வளவை வசூலிக்க முடியுமோ அவ்வளவையும் வசூலித்து எந்நேரமும் கிராம மக்களைத் துன்புறுத்தி வந்தனர். அவர்கள் அரசாங்கத்துக்கு ஒரு பகுதியைச் செலுத்திவிட்டு அதைப்போல் பன்மடங்கு பணத்தை மக்களிடம் கசக்கிப் பிளிந்தெடுத்து தாமே அபகரித்துக் கொண்டனர்.

நீதி பரிபாலன அதிகாரமும் அவர்களிடமே இருந்ததனால் அவர்கள் விளைவித்த கொடுமைகளும் அக்கிரமங்களும் சொல்லில் அடங்கா. மக்களைச் சித்திரவதை செய்து, அட்டைகளைப் போன்று இறுதித்துளி இரத்தம்வரை உறிஞ்சிக் குடித்தனர். வரியிறுக்கத் தவறியவரின் இல்லங்களைத் தீக்கிரையாக்குவது சாதாரண செயலாயிற்று. அதிகுறுகிய காலத்தில் நிறைந்த இலாபத்தைப் பெறுவதே அவர்களது சேவையின் குறிக்கோளாயிற்று. இதற்காக அவர்கள் எவ்வித அட்டூழியங்களையும் செய்யத் தயங்கவில்லை.

வருமானத்தை ரொக்கமாகப் பெற எத்தனித்த வர்த்தக சங்க அதிகாரிகள், பல புரட்சிகரமான மாற்றங்களையும் ஏற்படுத்தத் துணிந்தனர். அவர்கள் சிங்கள மக்களின் மொழி, பழக்க வழக்கங்கள், காணிகளில் நிலவிய பழைய காணியாட்சி மரபுகள் என்பனவற்றைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்கள் அறிவதில் அக்கறைகொண்டவர்களுமல்லர்.

அவர்கள், இலங்கையில் புராதன காலந் தொட்டு நிலவி வந்த காணியாட்சி முறையையும் இராசகாரிய முறையினையும் அகற்றிவிட்டு அவற்றிற்குப் பதிலாகச் சென்னையில் நிலவிய வரிமுறையினை ஏற்படுத்தினர். அவர்கள் காணிகளின் விளைச்சலில் அரைப்பங்கின் பெறுமதியை அரசாங்கத்துக்குக் கொடுக்குமாறு சட்டமியற்றினர்.

அதன்பின் மீன், உப்பு, சாராயம், கள்ளு, புகையிலை, ஆமை, ஆபரணங்கள் எனும் பொருள்களின் மேல் வரிகளையும் ஒரு தலை வரியையும் விதித்து அவ்வரிகளை ரொக்கப் பணமாக இறுக்குமாறு கட்டளைகள் பிறப்பித்தனர். பணப் புழக்கமில்லாத ஒரு சமுதாயத்தில் இச்சட்டங்களினல் ஏற்பட்ட இன்னல்களை மக்களாற் சகிக்க முடியவில்லை. அவர்கள் நாட்டின் பாரம்பரிய வழக்கங்களைக் கைவிட்டு குடியானவரிடமிருந்து இயன்றளவு பணத்தை ஈவிரக்கமின்றி அறவிட்டனர்.

இறைகளை அறவிடுவதில் சென்னை அதிகாரிகள் சர்வாதிகாரிகள் போலக் கருமமாற்றினர். அவர்கள் கொள்ளைக் கூட்டத்தினர் போன்று தம் சொந்த வருவாயைப் பெருக்குவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தனர். திருட்டின் பொருட்டே அவர்கள் இலங்கைக்கு வந்தனரென்று எண்ணுமாறு அவர்கள் நடந்து கொண்டனர்.

அவர்களைப் பற்றி சென்னை ஆள்பதியாகவிருந்த ஹோபாட் பிரபு கூறியமை குறிப்பிடத்தக்கது. "கொள்ளையிடுவதே அவர்களது தொழில். அவர்களது நலவுரிமைகள் இலங்கைக்கு அந்நியமானவை. தம்முடைய உத்தியோக நிலை அந்தரமானதாகையால் சொற்பகாலத்துக்குள் எவ்வளவு சூறையாட முடியுமோ அவ்வளவையும் சூறையாட அங்கலாய்ப்புடையவர்கள். இப்படியான போக்கிரிகளே அவர்கள்" என்றார்,

அவர்கள் பொருளாதார விடயங்களில் இவ்வாறு நாசத்தனமான பரிபாலனத்தை நடத்தியதுடன் நின்று விடவில்லை. அவர்கள்தயவு தாட்சணியம் அற்றவராய், பழி பாவத்துக்கு அஞ்சாதவராய், மிருகத்தனமான கொடுங்கோலாட்சி புரிந்தமையினுல் மக்களினது வெறுப்பையும் பகையையும் சம்பாதித்துக் கொண்டனர்.

**தென்னை வரி**

அரசாங்கம் 1796 செப்டெம்பர் முதலாம் நாள், தென்னை மரங்களின் மேல் விதித்த ஒரு வெள்ளிப் பண வரி கலகம் உருவாவதற்கு வழிவகுத்தது. எல்லா மரங்களின் மீதும் விதிக்கப்பட்ட இவ்வரி அநீதியானது என்று மக்கள் கருதினர். ஏனெனில் மரங்களின் விளைவு இடத்துக்கிடம் வேறுபட்டது. தவிரவும் இவ்வரி, ஏழைக் குடியானவர்களையே கூடுதலாகப் பாதித்தது. அரசாங்கம், வரிகள் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படவேண்டுமென கட்டளையிட்டதனால், உடனடியாக நாடெங்கும் எதிர்ப்பும் அதிருப்தியும் வெளிப்பட்டன.

**கலகம்**

பதினெட்டு மாத காலத்தினுள் ஏற்பட்ட இத்திடீர் மாற்றங்களினாலும் சிங்கள மக்களுக்கு விளைவிக்கப்பட்ட அநீதிகள் காரணமாகவும், 1797 யூன் மாதம், அரசாங்கத்துக்கெதிராக ஒரு கலகம் மூண்டது. திருகோணமலையில் சென்னை வரி அதிகாரி ஒருவர் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியே கலகத்தைத் தொடக்கி வைத்தது.

கலகத்திற்கான காரணிகளாக வர்த்தகக் கம்பனியினர் மக்கள் மீது சுமத்திய வரிச்சுமைகள், வரிகளை அறவிட இவர்கள் நடந்து கொண்ட கடுமையான வழிமுறைகள். (வரி அறவிடும் பகுதியை வரி வசூலிப் போருக்கு ஏலத்தில் விற்றனர்.), பதவி நீக்கப்பட்ட முதலியார்கள் எதிர்ப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இக் கலகம் உண்மையாக கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கெதிராக சுதேச மக்களால் ஏற்படுத்தப்பட்ட கலகமாகும். முக்கியமாக கொழும்பு திசாவனி, இரயிகம, றேவாகம, சியானசல் பிற்று கோரளைகளில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும், மட்டக்களப்பிலும் பரவியது. இக் கலகக்காரர்களுக்கு கண்டி இராச்சியத்தின் உதவி கிடைத்தது. மேலும் பிரான்ஸ் ஏஜண்டுகளினதும், ஒல்லாந்த உத்தியோகத்தர்களினதும் உதவியும் கிடைத்தன.

இங்கு ஏற்பட்ட கலகத்தைப் பற்றிய செய்திகள் ஹோபாட் பிரபுவுக்கு எட்டிய பொழுது, அவர் இலங்கை வாழ் மக்களின் குறைகளையும் அதிருப்தியையும் விசாரணை செய்யுமாறு ஒரு விசாரணைச்சபையை நியமித்தார். அதன் உறுப்பினர், ஜெனறல் த மியூறன், மேயர் அக்கினியூ,றொபேட் அன்ட்றூஸ் என்ற மூவராவர்.

அவர்கள் இலங்கையின் பரிபாலனத்தைப் பற்றி ஒரு நுணுக்கமான விசாரணையை நடத்தி, ஈற்றில் கலகம் அன்ட்றுசின் நிருவாகக் குறைவினாலும், அவருக்குக் கீழ் சேவை புரிந்த ஊழியர்களின் அட்டூழியங்களினாலுமே ஏற்பட்டதென்ற முடிவுக்கு வந்தனர். அதனுடன் பல மாற்றங்களையும் அவர்கள் சிபார்சு செய்தனர். அவற்றுள் முக்கியமானவை,

1. தென்னை வரி நீக்கப்படல். 2. சென்னை வரி சேகரிக்கும் முறையினை ஒளித்து வரிகளைச் சேவையின் மூலம் இறுக்கும் பழைய சிங்கள முறையினை மீண்டும் புதுப்பித்தல். சென்னை அலுவலாளர்களுக்குப் பதிலாக பழைய முதலியார்களை நியமித்தல். ஒல்லாந்தரின் லான்ட்றாட் நீதி மன்றங்களை ஏற்படுத்தல், என்பனவாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

யிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் நேற்று முன் தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற செட்டிகுளம் போக்குவரத்து பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-10,250)

## ஆட்டோவில்...

இருவர் உயிரிழந்துள்ளனர்.

கிரிபிட்டிய, பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ரூபசிங்க ஆராச்சிகே நயனானந்த மற்றும் பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த வசந்த பெரேரா ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை நிற காரினால் வந்த குழுவொன்றே குறித்த தாக்குதல் மேற்கொண்டதுடன் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இருவரும் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த இருவரும் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-10)

## 10 கிலோ...

பிரகாரம் பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டு, மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை மடக்கி பிடித்தனர்.

குறித்த நபரிடம் இருந்து 10 கிலோ நிறையுடைய சி-4 ரக வெடிமருந்தை மீட்டனர். அதனையடுத்து நபரை கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-10,33)

## ஏப்ரல் 15...

எடுக்கப்படவில்லை என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 15 ஆம் திகதியை பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துமாறு அரச அதிகாரிகள்மற்றும்பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியுடன் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும், ஏப்ரல் 15ஆம் திகதியை பொது விடுமுறையாக அறிவிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றார். (ம-10)

## எரிபொருள்...

எரிபொருள் பாவனை குறைவதற்கு நாட்டின் பொருளாதார நிலைமையும் ஒரு காரணம் என அதன் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அனைத்து எரிபொருட்களும் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதாகவும் ஷெல்டன் பெர்னாண்டோ சுட்டிக் காட்டியுள்ளார். (ம-10)

## வடக்கில்...

படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு, வட மத்திய, கிழக்கு, மேல், சப்ரகமுவ, வடமேல், தென் மாகாணங்களுடன் மொனராகலை மற்றும் மாத்தளை மாவட்டங்களின் சில இடங்களிலும் வெப்பநிலை இவ்வாறு அதிகரித்து காணப்படக் கூடும் என அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-10)

## ஓமந்தையில்...

சேர்ந்த 32 வயதுடைய ராஜன் நிரோஜன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்த குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் புகையிரதத்துடன்பிக்கப் ரகவாகனம்மோதுண்டு விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பு[illegible] தொண்டிருந்த [illegible] பன்றிக்கெய்தகுளம் பகுதியில் புகையிரதக் கடவையினை கடக்க முயன்ற பிக்கப் ரக வாகனம் புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் பிக்கப் ரக வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் புளியங்குளம் பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-10)

## ஜனாதிபதித்...

களுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும், அதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய பதிலும் பின்வருமாறு,

**கேள்வி :-** ரணில் - பஷில் சந்திப்பு தொடர்பாக பஷில் என்ன கூறினார்?

**பதில் :-** அது பற்றி கேட்பதற்கு நான் இன்னும் பஷிலை சந்திக்கவில்லை.

**கேள்வி:-** ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்போது நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளது. அதை நீங்கள் எவ்வாறு காண்கின்றீர்கள்?

**பதில்:-** கூடிய சீக்கிரம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வார்கள் என நினைக்கின்றேன்.

**கேள்வி :-** ஐக்கிய மக்கள் சக்தி புதிய கூட்டணியில் கைச்சாத்திட்டுள்ளது. அது குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில் :-** அவர்கள் என்ன செய்து கொண்டாலும் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும்இல்லை. 10 கூட்டணிகள் அமைத்துக் கொண்டாலும் பிரச்சினையில்லை.

**கேள்வி :-** மொட்டுக் கட்சியிலிருந்த சில உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டுள்ளார்கள். அதை நீங்கள் எவ்வாறு காண்கின்றீர்கள்?

**பதில்:-** அது நல்லம்.

**கேள்வி :-** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடப் போவதில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. உங்கள் கட்சியிலிருந்து வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்களா?

**பதில்:-** நிச்சயமாக. எமது கட்சியிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் களமிறக்கப்படுவார். அது யார் என்பதை இன்னும் நாம் தீர்மானிக்கவில்லை. ஆலோசித்து முடிவொன்றை எடுப்போம்.

**கேள்வி:-** அதுபோன்று நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றதே?

**பதில் :-** அவருக்கு இன்னும் காலம் இருக்கின்றது என நான் நினைக்கின்றேன். (ம-10)

## இல்ல விளை...

பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் அதிக உஷ்ணம் காரணமாக அனைவரையும் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-10)


மஹஜன சம்பத
திகதி 2024.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 5443
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 7 9 2 3 5 1
அத சம்பத F 2 3 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 18
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1473
W 09 18 21 62 W
Double Chance 53173

மெகா பவர்
திகதி 07/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1791
M 24 19 63 77 80
Double Chance 74921

லக்கி 7 VIP
திகதி 2024.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 0269
B 9 0 8 9 6 8 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3685
சீட்டிழுப்பு திகதி 07.04.2024
J 02 06 34 60
J 26964
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.07
சீட்டிழுப்பு இலக்கம் 0752
கன்னி 09 33 56 59 கன்னி
34227 24

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.04.2024 வெற்றி வாரம் 151
ஆங்கில எழுத்து W 7 3 0 0 7 1
61240 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் 20,272,620.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு 2417 சீட்டிழுப்பு திகதி 07.04.2024
03 18 42 73 K
86783
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,687,416.80

சனிதா
திகதி 2024.04.07 வெற்றி வாரம் 4578
09 26 29 38 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,551,592.80
19673

சசிரி
வெற்றி வாரம் 464
சீட்டிழுப்பு திகதி 2024.04.07
வெற்றி இலக்கங்கள் 13 30 36
43679
ரூ. 2,911,760/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4129 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.04.07 தினம் ஞாயிற்றுக்கிழமை
மேடம்
03 05 30 34
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.17,281,474.00
450813

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 21 12 13 37 41
1593
07.04.2024
784368
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 516,533,804.60

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2243
சீட்டிழுப்பு திகதி : 2024.04.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 105,138,529.60
06 26 28 38 C
107394


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-0087)

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.
மேலும் சிட்டை எழுதுனரும் உடன் தேவை.

**076 962 4477**

(393)

## வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.

Whatsapp
**416 303 5706**
SRILANKA
**076 934 7728**

(324)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0087)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமான பின்வரும் பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு தங்களது சுயவிபரம், பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், சேவைத் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நிழற்பிரதிகளுடன் விண்ணப்பத்தினை தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம், A-35, பரந்தன் பிரதான வீதி, கைவேலி, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு எதிர்வரும் 2024.04.29ம் திகதி திங்கட்கிழமை 12.00 மணிக்கு முன்னராக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

01.பதவி:-கணக்குப் பதிவாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம் :-215/13
சம்பள அளவுத்திட்டம் :-
அ. கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுனர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./
க.பொ.த சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 03 திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களுடனான சித்தி.

2. பதவி :- கிராமிய வங்கி முகாமையாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 205/13
சம்பள அளவுத்திட்டம் :-
அ. கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தர தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி./
க.பொ.த.உயர்தர தராதரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

3. பதவி :- உற்பத்தி உதவியாளர்
சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 326/16
சம்பள அளவுத்திட்டம் :-
அ. கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ. கூட்டுறவு ஊழியர் கனிஸ்ட தராதரப் பத்திரம்./
தரம் 08 கல்விச் சான்றிதழ்.

4. பதவி :- காவலாளி
சம்பளக் குறியீட்டு இலக்கம் :- 315/17
சம்பள அளவுத்திட்டம் :-
அ. 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

- வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை.(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கம் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- எவரேனும் ஒருவர் கூட்டுறவுச் சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்துள்ளார் எனின்,அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரிய வருமாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்.
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்கள் 04/2017(1), 04/2018(01) இற்கு அமைய வாழ்க்கைச் செலவுப் படியும், விசேட செயலாற்றுகைப் படியும் வழங்கப்படும்.
- இப்பதவிக்கு விண்ணப்பங்கள் செய்யும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப் படுமிடத்து சங்கத்தில் பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

தலைவர்,
புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவு,
பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கம். (C-0085)

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

### திரு.கணபதிப்பிள்ளை கிருஸ்ணாகரன்

(Spl.Trd(Maths), SLTS-I)



**ஆசிரியர் சேவை விபரம்**

1. யா/கப்புது ஏகாம்பர வித்தியாலயம்
27.01.1998 - 29.03.1999
2. யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
30.03.1999 - 14.01.2001
3. யா/கரணவாய் மகா வித்தியாலயம்
15.01.2001 - 13.03.2012
4. மன்/தேவன்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம்
14.03.2012 - 17.03.2014
5. யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்
18.03.2014 - 25.08.2022
6. யா/இமையாணன் அ.த.க வித்தியால்யம் (பிரதி அதிபர்)
26.08.2022 - 07.04.2024

எமது பாடசாலையின் பிரதி அதிபராகவும் கணித ஆசானாகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் மணி விழா நாயகன் ஓய்வுக் காலத்தில் நோய்நொடி இன்றி குடும்பத்தோடு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes!


வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
யா/இமையாணன் அ.த.க வித்தியாலயம்
வல்வெட்டித்துறை.

(376)

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும்

## வருடாந்த கும்பாபிஷேக தினம்

**காலம் : 09.04.2024**



தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வருடாந்த கும்பாபிஷேக தினம் 09.04.2024 செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகத்துடன் கூடிய சண்முக அர்ச்சனையும் வேற்பெருமானின் வீதி உலாவும் இடம்பெறவுள்ளதால் அத்தினத்தில் இடம்பெறும் பூசை வழிபாட்டில் அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அன்னதான செயற்பாட்டில் பங்கு பற்றி முருகனது திருவருளையும் குருவருளையும் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

தவத்திரு வே.முருகேசு சுவாமி
அன்பர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (C-0078)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org